செ.வெ.எண். 34 நாள். 19.8.2011

**நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளையொட்டி நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ்காந்தியின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20-ம் நாள் நாடு முழுவதும் நல்லிணக்க நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆகஸ்ட் 20 ஆம் நாள் அரசு விடுமுறை தினமானதால் இன்று (19.8.2011) மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.



19.8.2011 - நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நல்லிணக்க நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. அருகில் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமாற உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன். மேலும் எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல், பேச்சு வார்த்தைகள் மூலமாகவும், அரசியலமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்.

என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க மாவட்ட ஆட்சியரகத்தில் பணிபுரியும் அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழியை திரும்பக்கூறி ஏற்றுக் கொண்டார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எம்.ஜி.குழந்தைவேலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.